வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, நேற்று (12.10.2024) ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 65க்குட்பட்ட எஸ்.ஆர்.பி. கோவில் தெரு வடக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னைக்கு கனமழை எச்சரிக்கை:

தகுந்த முன்னேற்பாடுகளை செய்ய அதிகாரிகளுக்கு அறிவுரை!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, அக்.13

தமிழகத்தில் மிக கன மழை எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ள நிலையில் முன் னெச்சரிக்கை நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கூறி னார்.

தமிழக வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் நேற்று காலை சென்னை, எழிலகத் தில் உள்ள மாநில கட்டுப் பாட்டு அறையை பார்வை யிட்டார்.

பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது :-

வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்க உள்ள நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தகுந்த முன் னேற்பாடுகளை செய்யச் சொல்லி அரசின் நிர்வாகத்தி ற்கு அறிவுறுத்தி இருக்கி றார். நம்முடைய பேரிடர் மேலாண்மை துறையில் இருந்து மாவட்ட ஆட்சி தலைவர்கள் அனைவருக் கும் வருவாய் துறை ஆணை

யர் முன்னெச்சரிக்கை நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார். முதல்வரும் நேரடியாக மாவட்டஆட்சி தலைவர்க ளுக்கு அறிவுறுத்தி இருக்கி றார்.

வருகிற 15, 16, 17, 18 ஆகிய 4 நாட்களுக்கும் கன மழை இருப்பதாக வானிலை ஆய்வு மையம் இன்றைக்கு தெரிவித்து இருக்கிறது. அதுவும் குறிப் பாக, சென் னையை சுற்றி யிருக்கும் மாவட்டங்க ளுக்கு அதி கப்படியான மழை இருக் கும் என்று சென்னை வானிலை மையம் எச்சரித்திருக்கிறது.

அதற்கு வேண்டிய முன் னேற்பாடுகளை செய்ய வேண்டும் என்று முதல்வர் எங்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறார். அதன்படி, முன்னெச்சரிகை நடவடிக் கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். இந்த மழையை எதிர்கொள்ள வேண்டிய அத்தனை வித மான நடவடிக்கைகளை யும் இந்த அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது. வருகிற வடகிழக்கு பருவம ழையை எதிர்கொள்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறி னார்.

அப்போது வருவாய் நிர் வாக ஆணையர் ராஜேஷ் லக்கானி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடன் இருந்த னர்.

கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

அக்.26 மாநில அளவிலான இறுதிப் போட்டி!

வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, அக்.13-

கலை இலக்கிய பகுத்தறி வுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வருமாறு :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகம் சிறந்த முறையில் கொண்டாடி வருகிறது. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார் பில் தலைமையால் கொடுக் கப்பட்டுள்ள கலைஞரின் பாடல்கள், வசனங்கள் ஒப் புவித்தல் போட்டிகள் மாவட்டம் தோறும் நடை பெற்று முடியும் தருவாயில் உள்ளது. நிறைவாக மாநில அளவில் சிறந்த விருதா ளர்கள் மூவரை தேர்ந்தெடுத்து கழகத் தலைவர் அவர்களின் திருக்கரங்களால் பரிசளிக் கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. எனவே, மாவட் டம் தோறும் நடைபெறும் போட்டிகளை மாவட்ட அமைப்பாளர்கள் விரை வில் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றோம்.

அக்டோபர் 26ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், மாநில அளவிலான இறுதிப் போட்டி நடைபெற உள் ளது. மாவட்ட அளவில் சிறந்த மாணவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் கள், அக்டோபர் 26ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடை பெற உள்ள இறுதிப் போட் டியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு வாகை சந்திர சேகர் கேட்டுக் கொண்டுள் ளார்.

10, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கு தேர்வு அட்டவணை 14ஆம் தேதி வெளியீடு!

சென்னை, அக்.13-

வரும் திங்கட்கிழமை 10, 11, 12 ம் வகுப்புகளின் தேர்வு தேதியை பள்ளி கல்வி துறை அமைச்சர் அன் பில் மகேஷ் பொய்யா மொழி வெளியிட உள்ளார் என பள்ளிக்கல்வி துறை தெரிவித்துள்ளது.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை நாளை (அக். 14) அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிடு கிறார்.

தமிழகத்தில் 10, 11 மற் றும் 12 ஆம் வகுப்புகளுக் கான பொதுத் தேர்வு மார்ச் ஏப்ரல் மாதங்களில் நடை பெறும். இந்நிலையில் நடப்பு (2024-25) கல்வியா ண்டுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அக். 14ஆம் தேதி வெளியிட உள்ளார்.

இதுபற்றி பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட அறிவிப் பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு முதல்வர், துணை முதல்வர் ஆகியோ ருடன் மேற்கொண்ட ஆலோசனையின் பேரிலும், அவர்களின் அறிவுறுத்த லுக்கு இணங்கவும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி கோயம்புத்தூரில் வருகிற திங்கள்கிழமை (14.10.2024) 10,11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக் கான பொதுத்தேர்வு அட்ட வணையை வெளியிடஉள் ளார்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

லடாக் பகுதியில் விபத்தில் பலியான

திருத்தணி ராணுவ வீரர் உடல் மனைவியிடம் ஒப்படைப்பு!

ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது!

திருத்தணி, அக்.13

லடாக் பகுதியில் விபத் தில் பலியான திருத்தணி ராணுவ வீரரின் உடல் அவ ரது மனைவியிடம் ஒப்ப டைக்கப்பட்டது. அவரது உடல் ராணுவ மரியாதையு டன் அடக்கம் செய்யப்பட் டது.

திருத்தணி அருகே ஆர். கே.பேட்டை பகுபகுதியில் உள்ள பெரியராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பெருமாள். இவர் முன் னாள் ராணுவவீரர் ஆவார். இவரது மகன் ஸ்டான்லி. இவர் ராணுவ வீரராகப் பணிபுரிந்தார். இவருக்கு மேனகா என்ற மனைவியும் மற்றும் சுருதிகா என்ற மக ளும், அபிஷேக் என்ற மக னும் உள்ளனர்.

ஸ்டான்லி ஜம்மு-காஷ் மீர் மாநிலம் லடாக் பகுதி யில் ராணுவத்தில் நாயக்சு பேதாரராக இருந்தார். சம்பவத்தன்று பணியின் போது ராணுவ வீரர்களுக்கு வண்டியில் உடைகள் எடுத் துச் சென்றார்.

லே என்ற இடத்தில் மலைப்பகுதியில் சென்ற போது பின்னால் வந்த ஒரு லாரி இவர் சென்ற ராணுவ வாகனத்தின் மீது பயங்கர மாக மோதியது. இதில் படு காயம் அடைந்த ஸ்டான்லி பரிதாபமாக உயிரிழந்தார்.

அதையடுத்து மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு ஸ்டான்லியின் உடல் விமா னம் மூலம் டெல்லிக்கு எடுத்து வரப்பட்டது. பின் னர் சென்னை கொண்டுவ ரப்பட்டு அங்கிருந்து அவ ரது சொந்த கிராமமான பெரிய ராமாபுரத்துக்கு கொண்டு வரப்பட்டது. பின்னர் உடல் அவரது தந்தை பெருமாள் மற்றும் மனைவி மேனகா ஆகியோ ரிடம் ஒப்படைக்கப்பட் டது. ஸ்டான்லி உடலைப் பார்த்ததும் அவரது மனைவி மேனகா மற்றும் குழந்தைகள், தந்தை பெரு மாள் ஆகியோர் கதறி அழு தனர். பின்னர் உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி னார்கள்.

தமிழ்நாடு அரசு சார்பில் திருவள்ளூர் மாவட்ட ஆட் சியர் டாக்டர் பிரபுசங்கர் அஞ்சலி செலுத்தி ஸ்டான் லியின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஆறுதல் கூறினார்.

அதன் பின்னர் அவரது உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ராணுவ மரியா தையுடன் அவரது உடல் பெரிய ராமாபுரத்தில் உள்ள சுடுகாட்டுக்கு வாக னத்தில் எடுத்துச் செல்லப் பட்டது. அங்கு 32 துப் பாக்கி குண்டுகள் முழங்க அவருக்கு ராணுவ வீரர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அ தை த் தொ ட ர் ந் து கிறிஸ்தவ முறைப்படி ஜெபம் செய்யப்பட்டு ஸ்டான்லியின் உடல் அடக் கம் செய்யப்பட்டது.

விபத்தில் பலியான ராணுவ வீரர் ஸ்டான்லி கடந்த 28 ஆண்டுகளாக ராணுவத்தில் பணிபுரிந்துள் ளார். அடுத்த ஆண்டு இவர் ஓய்வு பெற இருந்த நிலை யில் விபத்தில் சிக்கி உயிரி ழந்தார்.

நேரில் வந்து பதிவு செய்ய முடியாது:

பக்தர்களின் பாதுகாப்பு கருதியே ஆன்லைன் முன்பதிவு அமல்!

கேரள அறநிலையத்துறை அமைச்சர் பேட்டி!

திருவனந்தபுரம், அக். 13

பக்தர்களின் பாது காப்பைகருத்தில்கொண்டே கட்டுப்பாடு இறுக்கப்பட்டு உள்ளது. சபரிமலை ஐயப் பனை தரிசிக்க ஆன்லைன் முன்பதிவு கட்டாயம் என் பதை தளர்த்த முடியாது என்று கேரள அறநிலையத் துறை அமைச்சர் வி.என். வாசவன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் உள்ள சபரி மலை ஐயப்பனை தரிசிக்க வெளிமாநிலங்களில் இருந்து மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருந்தும் கூட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். ஐயப்பனை தரிசிக்க ஒரு மண்டலகாலம் விரதம் அனுசரிக்க வேண்டும். காலில் செருப்பு அணியக் கூடாது. அகரீதியாகவும் பத் தியம் இருக்க வேண்டும்.

இப்போது பக்கதர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் தும் வகையில் தேவசம் வாரியமும், கேரள அறநி லையத் துறையும் சில முடி வுகளை எடுத்துள்ளன.

கேரளாவின் சபரிமலை ஐயப்பன் கோயிலில் நாட் டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சென்று மக்கள் சாமிதரிசனம் செய்கின்ற னர். தொடர்ந்து கூட்டம் அதிகரித்த வண்ணம் இருந்த நிலையில், உடனடி தரிசனம் ஆன்லைன் பதிவு என இருமுறைகளில் பக்தர் கள் தரிசனத்துக்கு அனும திக்கப்பட்டு வந்தனர். இந்த இரு முறைகளையும் பயன் படுத்தப்பட்ட நிலையில், மண்டல மற்றும் மகரவி ளக்கு சீசனின்போது 15 மணி நேரம் வரைதரிசனத் துக்காக பக்தர்கள் காத்தி ருக்க வேண்டிய நிலை ஏற் பட்டது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த ஆண்டு மண்டல பூஜை நேரத்தில் ஐயப்பனை தரிசனம் செய்ய முடியாமல் வீடு திரும்பினர். சமூக வலைத்தளங்களில் தேவசம் வாரிய நிர்வாகத்தி ற்கு கடும் எதிர்ப்பு கிளம்பி யது. தொடர்ந்து கூட்டநெ ரிசல் தொடர்பாக திருவி தாங்கூர் தேவசம் வாரிய தலைவ சாந்த் தலைமையில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேரடி முன்பதிவு காரண மாக நாள்தோறும் 1 லட்சத் துக்கும் மேற்பட்டோர் குவிந்ததாகக் கூறி உடனடி தரிசன முறையை ரத்து செய்ய முடிவெடுக்கப்பட் டது. இனிசீசன்காலங்களில் ஆன் லைன் முன்பதிவு அடிப்ப டையில் ஒரு நாளைக்கு 80 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படு வர் எனவும் இதனால் நிலக் கல், பம்பை உள்ளிட்ட 10 இடங்களில் செயல்பட்டு வந்த உடனடி முன்பதிவு கவுன்டர்கள்மூடப்படுவதா கவும் தெரிவிக்கப்பட்டது.

மண்டல மகர விளக்கு பூஜைகளை முன்னிட்டு 3 மாதங்களுக்கு முன்னதா கவே ஆன்லைன் முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள தாகவும் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து கூட்டம் முடிந்ததும் தேவஸ்தான தலைவர் பிரசாந்த் அறிக் கையை வெளியிட்டார். அதில் இனி வரும் காலங்க ளில் பக்தர்கள் ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர் என வும் உடனடி தரிசன முன்ப திவு முறை ரத்து செய்யப்ப டும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பம்பை முதல் சன்னிதா னம் வரைரோப்கார் அமைப்பது குறித்து ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும் அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விரிவான அறிக்கை, வரும் 23ம் தேதி உயர்நீதிமன்றத்தில் சமர்பிக் கப்படும் எனவும் நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் ரோப் கார் பணிகள் தொடங்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அப்பம், அரவ ணைக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்லவும், அவசர காலங்க ளில் ஆம்புலன்ஸ் சேவைக் கும் ரோப் கார் பயன்படுத் தப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் பதிவில்லா மல் சபரிமலைக்கு நேரடி யாக வந்து முன்பதிவு செய்ய பக்தர்கள் எக்கார ணம் கொண்டு அனுமதிக் கப்படமாட்டார்கள் என்று தேவசம் வாரியமும், அறநி லையத்துறையும் திட்டவட் டமாக அறிவித்துள்ளதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. நேரடி யாக வரும் பக்தர்களையும் ஐயப்பனை தரிசிக்க அனும திக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்க முடி யாது என்று தேவசம் வாரி யம் அறிவித்துவிட்டது.

இந்நிலையில் செய்தியா ளர்களுக்கு பேட்டி அளித்த கேரள அறநிலையத்துறை அமைச்சர் வி.என்.வாசவன், “பக்தர்களுக்கு எந்தப் பிரச் சினையும் ஏற்படக்கூடாது. கூட்ட நெரிசலில் சிக்கி திணறக்கூடாது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்த வேண்டும் என்பதில் அரசு திடமாக உள்ளது.

எனவே பக்தர்கள் அனை வரும் அரசின் முடிவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்க றேன். ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்வ தன் வாயிலாக நேர விரயத் தையும் குறைக்க முடியும். இது பக்தர்களுக்கு உகந்த தாக இருக்கும். எனவே இந்த புதியவிதிமுறையை அரசு தளர்த்தாது” என்று கூறினார்.

சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் 14-10-2024 அன்று திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் ,அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா

அக்டோபர் 29-ல் வெளியாகும் வாக்காளர்கள் பட்டியல் சரிபார்த்தல்

இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல்

கழக ஆக்கப் பணிகள்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

கவரைப்பேட்டை

ரெயில் போக்குவரத்து தொடங்கியது!

சென்னை, அக்.13

மைசூரிலிருந்து தர்பங்கா நோக் கிச் சென்ற பாக்மதி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரெயில் (12578) வெள்ளிக் கிழமை இரவு 7.30 மணியளவில் பொன்னேரியை அடுத்த கவரைப் பேட்டை ரயில் நிலையம் அருகே சென்றுகொண்டிருந்தது. அப்போது சரக்கு ரெயில் மீது மோதி விபத்துக் குள்ளானது. சிக்னல் கோளாறு கார ணமாக இவ்விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின் றன. இந்த விபத்தில் 19 பேர் படுகா யம் அடைந்துள்ளனர்.

இந்த விபத்தில், இரண்டு ரெயில் களின் பெட்டிகளும் தடம்புரண்டு மற்ற தண்டவாளங்களை ஆக்கிரமித்துள் ளன. இதனால், தடம்புரண்ட பெட்டி களை அகற்றும் பணியில் ஊழியர் கள் விடிய விடிய தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், கவரைப் பேட்டையில் ரயில் விபத்து நடந்த இடத்தில் சென்னை மார்க்கத்தில் மீண்டும் ரயில் சேவை தொடங்கியது.

தற்போது டெல்லியில் இருந்து சென்னை வந்த ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில், மெயின் லைனில் 10 கி.மீ. வேகத்தில் கடந்து சென்றது.